Own Your House Scheme

* 230 *Q*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Housing Board to collaborate with the Life Insurance Corporation for the implementation of the 'Own Your House Scheme'; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) சொந்த வீடு கட்டும் திட்டம் என்று அழைக்கப்படும் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் திட்டம் ஒன்றை மாநில வீட்டு வசதி வாரியங்களின் மூலமாக நிறைவேற்றுவது குறித்து இந்த அரசின் கருத்துரைகளுக்காக இந்திய அரசு அனுப்பியுள்ளது. இந்த அரசின் கருத்துக்கள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறுதி முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. அதன்படி ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தில் ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்குத் தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் மாநில வீட்டு வசதி வாரியங்கள் வீடுகள் கட்டி விற்பதற்கு வகை செய்வதற்காக அவற்றிற்கு இத் திட்டத்தின் கீழ் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடன்கள் வழங்கக் கருதியுள்ளது. வீட்டு வசதி வாரியங்கள் பெருநகரங்களிலும் அவற்றைச் சுற்றிலும் நகரியங்களை உருவாக்குவதற்கும் அங்குள்ள மனைகளையும், கட்டப்படும் வீடுகளையும் பொது மக்களுக்கு ஒதுக்குவதற்கும் இத் திட்டம் வகை செய்கிறது.

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether the rate of interest charged by the L.I.C. is high and may I know whether L.I.C. is willing to finance the entire project of the Housing Board?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, வட்டி விகிதத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். இரண்டரை சதவிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. வட்டித் தவணை தவறினால் இரண்டரை சதவிதம் கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. வீட்டு வாரியத்தினால் மேற்கொள்ளப்படும் எல்லாத் திட்டங்களுக்கும் எல்.ஐ.சி. தருவது என்பது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அப்படிப்பட்ட எண்ணங்கள் பேச்சுவார்த்தையில் இருந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 21]

THIRU *K.* M. SUBRAMANIAM: Are the Government aware that during the last 10 years or so, right from 1959 to 1972, only 10,000 houses have come up in the City of Madras and it is due to the high incidence and increase in annual valuation of houses and rate of property tax by the Corporation?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, 10 ஆயிரம் வீடுகள்தான் கட்டப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதைப்பற்றிய ஸ்டாட்டிஸ்டிக்ஸ என்னிடத்திலே இல்லை, தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Loans for Tourism Development Projects

* 231 *Q.*—THIRU R. R. MUNUSWAMY: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Department of Tourism has issued loans for Tourism projects in this State for private parties; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்:

(*a*) No.

(*b*) Does not arise.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, சுழலும் ஹோட்டல் எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சுழலும் ஹோட்டல் ஒன்று இப்பொழுது அண்ணா நகரில் அண்ணா டவரில் கட்ட வீட்டு வசதி வாரியம் ஏற்பாடு செய்து வருகிறது. தனிப்பட்ட முறையில் நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. சோலையா: தலைவரவர்களே, இந்த சுழலும் ஹோட்டல் என்பது குடை ராட்டினம் போல சுற்றுமா அல்லது தலைகீழ் ராட்டினம் போன்று சுற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அது கட்டப்பட்ட பிறகு மாண்புமிகு அங்கத்தினர் அவர்களை அதில் உட்கார வைத்துக் காட்டுகிறேன். அதுவரையில் அவர் பொறுத்திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.